

JESUS REDEEMS MINISTRIES

# ஊழியர் உலகம்

Volume: 17 | Issue: 04 | June 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10

பரிசுத்தத்துடனும் கீழ்ப்படிதலுடனும்
தேவனுடைய சித்தத்தை செய்யும்போது, **பாத்திரம்**

## நிரம்பி வழியும்...

# வாலிபர் உலகம்




**வாலிபர்களே!**
**உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் புதிய விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கும் இந்தப் பத்திரிகையை ஒவ்வொரு மாதமும் முழுமையாக வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்க கொடுங்கள்.**

₹100 ஆண்டு சந்தா

₹1000 ஆயுள் சந்தா

இப்பத்திரிக்கையை குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்குப் பிரயோஜனமான கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

Scan ME

## உள்ளே!



நானும் IAS!! 4



Soul Detox 16





மீண்டும் எழுவேனா? 24

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

நெருக்கமான வாலிப உள்ளங்களுக்கு, இயேசு கிறிஸ்துவின்
இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

**தேவன் நம்மை நிரம்பி வழியும் ஆசீர்வாதத்தினால் நிரப்ப விரும்புகிறார். ஆனால், அநேக நேரம் அதைப் பெறுவதற்கான ஆயத்தம் நம்மிடம் இல்லாததினால், அந்த ஆசீர்வாதத்தை இழந்து விடுகிறோம்.**

**கர்த்தருடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டில் 3 மாதம் இருந்தது. அந்த மூன்று மாதத்தில் தேவன் ஓபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார்.**

**கர்த்தருடைய பெட்டியின் நிமித்தம் ஒரு பெரிய உயிரிழப்பு உண்டானது. ஆனால், இப்பொழுது ஒரு பெரிய ஆசீர்வாதம்! எப்படியென்றால், "தேவன் ஓபேத் ஏதோமை ஆசீர்வதித்தார். ஆசீர்வதிக்கக் காரணம் என்ன?**

1. ஓபேத் ஏதோம் தேவனுடைய பெட்டிக்குக் கொடுத்த மேன்மையும் கனமுமே! ஊசா கர்த்தருடைய பெட்டி தங்களிடத்தில் தானே 20 வருடம் இருந்தது, எப்படி வேண்டுமானாலும் கையாளலாம் என்று நினைத்ததால், ஒரு விபரீத முடிவு ஏற்பட்டது. ஆனால் கனத்தோடும் பக்தியோடும் தேவனுடைய பெட்டியைப் பராமரித்ததால் பெரிய ஆசீர்வாதம் ஓபேத் ஏதோமிற்கு கிடைத்தது.

2. கர்த்தருடைய பெட்டியைப் பார்த்து எல்லோரும் பயந்து, ஒதுங்கி, விலகி நின்றனர். ஊசாவின் மரணத்திற்கு பிறகு, அனைவரும் பெட்டியைக் கிட்ட சேர பயந்தார்கள். ஆனால், ஓபேத் ஏதோம் தேவனுடைய பெட்டியை முழு மனதோடு, பயம் இல்லாமல், விசுவாசத்தோடு தன் வீட்டில் ஏற்றுக் கொண்டார். நீங்கள் தேவனுடைய பிரசன்னத்திற்கும், தேவனுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும்போது, அதனுடைய நிச்சயமான விளைவும், பலனும் - ஆசீர்வாதமே.

3. தேவனுடைய பிரசன்னத்தில் பயபக்தியோடும் மனதில் தாழ்மையோடும் நெருங்குபவர்களுக்கு, பலனும் உயர்வும் உண்டு. போலியான பக்தியும், பெருமையும் கொண்டவர்களுக்குத் தேவனுடைய பிரசன்னம் நியாயத்தீர்ப்பையும் பயத்தையும் திகிலையும் கொண்டு வரும்.

**இன்றைக்கும் வாலிபர்களாகிய உங்களைத் தேவன் ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆனால், ஓபேத் ஏதோமினிடத்தில் காணப்பட்ட பயபக்தியும் உண்மையான அன்பும் தாழ்மையும் இருந்தால், நீங்களும் இதேபோல் நிரம்பி வழியும் ஆசீர்வாதங்களைப் பெறலாம்.**

தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**



# நானும் IAS!!

**பலமுறை UPSC exam எழுதி clear பண்ணி, இன்றைக்கு Railway-ல் officerஆக பணிபுரிந்து வரும் சகோதரர் பெலிக்ஸ் அவர்களுடைய வாழ்க்கை பயணத்தைப் பற்றி அவரிடமே கேட்டு அறிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறீர்களா? வாங்க கேட்போம்.**



சாட்சி: தொகுப்பு : காட்லின்

### உங்களுடைய சிறுபிராயம் மற்றும் படிப்புப் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் தூத்துக்குடி மாவட்டம் மேலப்பனைக்குளம் என்கிற ஒரு கிராமத்தில், ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். என் வீட்டில் நான் ஒரே பையன். என் பெற்றோர் என்னைச் சிறுவயதிலேயே ஒரு **Matriculation** பள்ளியில், மிகவும் கஷ்டப்பட்டு தான் படிக்க வைத்தார்கள். நான் 9-ம் வகுப்புவரை படிப்பின் மீது பெரிய ஆர்வம் இல்லாமல் இருந்தேன். அப்படி இருக்கும்போது, பள்ளியில் நடைபெற்ற ஜெபக்குழுவில் நானும் இணைந்து ஜெபித்தேன். என் பெற்றோரும் ஜெபம் செய்து படிக்க வேண்டும் என்று சொல்லி என்னை உற்சாகப்படுத்தினார்கள். அதனால், 10ஆம் வகுப்பில் 2 பாடங்களில் **centum** மற்றும் 12ஆம் வகுப்பில் **Maths** பாடத்தில் **centum** எடுத்ததோடு வகுப்பில் **school first** வாங்கினேன். 12ஆம் வகுப்பு முடித்து **Automobile Engineering** படிக்க ஆசைப்பட்டு படித்து அதிலும் **gold medal** வாங்கினேன். எனக்குக் கார்கள் என்றால் ரொம்ப பிடிக்கும். அதில் நிறைய **designs, inventions** பண்ண வேண்டும் என்ற கனவு எனக்கு இருந்தது. அதற்காகச் சிறு வயதிலிருந்து **focus** பண்ணிப் படித்தேன்.

### ஒகே... உங்களது சிறு வயது கனவு நிறைவேறியதா? அதை நோக்கித் தான் பயணம் செய்தீர்களா?

ஒரு நல்ல **Company**ல் சேர்ந்து அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டும் என்ற கனவுடன் நிறைய **Companies**க்கு என்னுடைய **Resume**ஐ அனுப்பி வைத்து, **interview attend** பண்ணினேன். **Interview** முடித்தபிறகு உங்களுக்கு **Recommendation**க்கு கம்பெனியில் யாராவது தெரிந்தவர்கள் இருக்கிறார்களா என்று கேட்பார்கள். எனக்குச் சிபாரிசுக்கு யாரும் இல்லை, பணமும் இல்லை, என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தபோது, கொரோனா நாட்களில் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியில் **uncle** ஜெபிக்கும்போது நானும், ஆண்டவரே, ''நீங்கதான் எனக்கு **Recommend** பண்ண வேண்டும், ஒரு சின்னக் கிராமத்திலிருந்த என்னைக் கொண்டுவந்து உயர்த்தி **University**யில் **Gold medal** வாங்க வைத்தீர்,




ஆனால் இப்பொழுது எனக்கு ஏன் இவ்வளவு கஷ்டங்களைத் தருகிறீர், நான் என்ன தவறு செய்தேன்'' என்று ஜெபித்தேன். அப்பொழுது தான் ஆண்டவர், ''நீ எல்லாமே என்னிடம் கேட்டுக் கேட்டுச் செய்தாய், ஆனால் உன் வாழ்க்கையில் நான் என்ன சித்தம் வைத்திருக்கிறேன் என்று நீ என்னிடம் கேட்கவில்லையே'' என்று சொன்னார். அன்றிலிருந்து நான் தினமும் ஜெபிக்க ஆரம்பித்தேன். ''உன்னை நான் ஒரு பெரிய அதிகாரியாக மாற்றுவேன்'' என்று தேவன் என்னோடு பேசினார். அதிகாரியாவதற்கு நமக்கு எந்தத் தகுதியும் இல்லையே, நான் படித்தது **Engineering**, ஆனால் **administration**னில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லையே என்று நினைத்தேன். ஆனால், ஆண்டவர் சொல்கிறாரே என்பதற்காக **Civil Service** எழுதினால் **IAS** அல்லது **IPS** ஆகலாம் என்று ஒரு தெளிவு வந்தது.

### சூப்பர்... UPSC exam எழுத ஒரு தெளிவைக் கொடுத்த ஆண்டவர், UPSC எழுதி வெற்றி பெறச் செய்தாரா?

ஆண்டவரிடம் **UPSC** படிக்கலாமா என்று விசாரித்தபோது, ஆண்டவர் ஊழியர்கள் மூலமாக எனக்கு உறுதிப்படுத்தினார். அதனால் நான் ஆண்டவரை நம்பி **Civil Service exam**க்காக படிக்க ஆரம்பித்தேன். முதல் முயற்சியிலேயே **Prelims, Mains, interview** வரைக்கும் சென்றேன். ஆண்டவர் இவ்வளவு அழகாய் நடத்துகிறார்; இனி வெற்றி தான் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், 10-15 மதிப்பெண்களில் நேர்காணலில் தோல்வியடைந்தேன். அப்பொழுது, ஆண்டவர் இவ்வளவு தூரம் வெற்றியைக் கொடுத்து, இப்போது தோல்வியைக் காண செய்தாரே என்று வருத்தப்பட்டு, மிகவும் வேதனைப்பட்டேன். முதல் முயற்சி என்பதால் பாதிப்பு பெரிய அளவில் இல்லை. மீண்டும் படித்து, 3 முறை நேர்காணல்வரை சென்று தோல்வியடைந்தேன். அப்போது தான், என்னுடைய உறவினர்களின் இழிவான வார்த்தைகளைக் கேட்டு, மிகவும் மனமுடைந்துபோன நிலையில், 2025ல் ஆண்டவர், ''உன்னைச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் காணும்படி செய்வேன்; இந்த ஒரு முறை முயற்சி செய்'' என்று மீண்டும் என்னோடு பேசினார். நான் மறுபடியும் தோல்வியடைய போகிறேனோ என்ற பயத்துடன், ஆண்டவர் சொன்னதற்காகக் கடைசியாக ஒரு முறை முயற்சித்து பார்ப்போம் என்று நான்காவது முறை எழுதினேன். ஆண்டவர் எனக்கு வெற்றியைக் கொடுத்து, இன்றைக்கு **Railway Officer** என்ற பதவி கொடுத்து, என்னை உயர்த்தினார்.

### சூப்பர்... Automobile Engineering படித்து வேறு கனவோடு இருந்த உங்களுக்கு எப்படி UPSC படிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது?



கல்லூரி முடித்துவிட்டு ஒரு கஷ்டமான வேலை தான் செய்துகொண்டிருந்தேன். **Covid**க்கு முன்பு, எங்களுடைய ஊருக்கு **Collector** வந்து நலத்திட்ட பணிகள் செய்துவிட்டு போனதை என் அப்பா பார்த்து என்னிடம், ''நீயும் ஏன் ஒரு காலெக்டராக கூடாது'' என்று கேட்டார். அதற்காக முயற்சி செய்கிறவர்கள் **prepare** பண்ணுவதை பார்த்துவிட்டு ''அது ஒரு சாதாரணமான விஷயம்

இல்லை'' என்று சொல்லிவிட்டேன். ஆனால், அதே நேரத்தில் ஆண்டவரும் என்னோடு பேச ஆரம்பித்தார். கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய சித்தத்தை புரிந்துகொண்டு, என் அப்பாவின் கனவு நிறைவேற வேண்டும் என்று **UPSC** படிக்க ஆரம்பித்தேன்.

### Wow! சுவாரஸ்யமாக இருக்கிறது! UPSC படிக்கும்போது நிறைய பிரச்சனைகள் அவமானங்களைச் சந்தித்திருப்பீர்கள். அதை எப்படி கடந்து வந்தீர்கள்?

பொறியியல் படிப்பின் காரியமாயிருந்தால், **Professors, friends** என்று யாரிடமாவது கேட்கலாம். ஆனால், **Civil Service** படித்த யாரும் என் குடும்பத்தில் இல்லை. நான் தான் என் குடும்பத்தில் முதல் **Civil servant.** அதனால், எப்படி படிக்க வேண்டும் என்று **guide** பண்ண யாரும் இல்லை. ''நான் என்ன பண்ண வேண்டும்'' என்று ஜெபித்தபோது, சிலர் மூலமாக எனக்குக் கிடைத்த **Links**ல் போய் எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்று அறிந்து, **Self-preparation** தான் பண்ணினேன். முதல் படி **(First Phase)** எடுத்து வைக்கும்போது கஷ்டமாகத் தான் இருந்தது. நான் சில **attempts** பண்ணும்போதெல்லாம், அதற்கெல்லாம் தகுதி வேண்டும் என்று சிலர் சொன்ன வார்த்தைகள் என்னைக் காயப்படுத்தினது. ஆனால், ஆண்டவர் என்னோடு இருந்ததால், இந்த அவமானங்களைக் கடந்து வர முடிந்தது.



### சரி... அழகாக உங்களை நடத்தியிருக்கிறார். இன்று இதை வாசித்துக் கொண்டிருக்கிற வாலிபர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**UPSC** என்றாலே கஷ்டம் என்று நினைக்க வேண்டாம். அது திறமைகளைத் தேடுகின்ற ஒரு **exam** என்று சொல்லலாம். நான் **clear** பண்ண 5 வருடங்கள் ஆனது. அதுபோல, அனுபவமுள்ள ஆட்களிடம் அதைப் பற்றிக் கேட்பது நல்லது. முக்கியமாக முந்தின வருடங்களில் உள்ள **Question papers**-ஐ பார்த்தாலே நிறைய **ideas** கிடைத்துவிடும். **Beginners** கண்டிப்பாக **videos, links** என்று போகாமல் புத்தகங்களில் ஆரம்பிக்கிறது நல்லது. கனவை நோக்கிப் போகிற எல்லாருடைய பாதையும் மோசமாகத் தான் இருக்கும். வேதனைகள் இருக்கும். எதிர்பார்த்தது கிடைக்காமல், **delay** ஆகிறதே என்ற விரக்தி வரத்தான் செய்யும். ஆனால், ஆண்டவருக்கு முதலிடம் கொடுத்து அவரை உங்களுக்கு ஆலோசகராக வைக்கும்போது, அவர் என்றென்றைக்கும் கைவிடாமல் கூடவே இருந்து உங்கள் கனவை நிறைவேற்றுவார்.






அன்பான வாலிபர்களே! கனவை அடைய வேண்டும் என்ற இலக்கோடு படிக்கும்போது, படிப்பின் மேல் சோர்வு என்பதே வருவதில்லை. அப்படி தான் சகோதரர் பெலிக்ஸ் தோல்விகள் வந்தபோதும் விடாமல் படித்து அவரது கனவை அடைய தொடர்ந்து பயணம் செய்தார். நீங்களும் தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல் இலக்கை நோக்கியே பயணம் செய்யுங்கள்.

புதிர் : ஜோஸி

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களில் வேதாகமத்தில் உள்ள நபர்கள் பெயர் கண்டுபிடித்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.



















## கடந்த மாத விடைகள்

1. ஏரோது (மத்தேயு :2:1)
2. கேத்தூராள் (ஆதியாகமம் :25:1)
3. பில்காள் (ஆதியாகமம் :30:3)
4. லாபான் (ஆதியாகமம் :24:28)
5. சூவா (ஆதியாகமம்:38:2)
6. போத்திபார் (ஆதியாகமம்:39:1)

சரியான விடைஅனுப்பும்
ஒரு நபருக்கு பரிசு உண்டு

கடந்த மாத வெற்றியாளர்
**சகோதரி அஷ்வினி, கோவை**
அவர்களை வாழ்த்துகிறோம்.

BIBLE Treasure Hunt

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **15.06.2026**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

# இயேசுவைப் போல் நிரம்பி வழியும் அபிஷேகம்!

**தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார், தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார் (யோவான் 3:34).**

உங்களுக்குள் அபிஷேகம் நிரம்பும்போதுதான், பரிசுத்த ஆவியானவர் உங்களை ஜெபத்தில் வளரச் செய்வார். பரிசுத்த ஆவியானவர் தான் கிறிஸ்துவின் அன்பை நமக்குள் கொண்டு வருபவர். ஆவியானவர் தான் இயேசுவின் தாழ்மையை நமக்குள் கொண்டு வருவார். ஆவியானவர் தான் இயேசுவின் மன உருக்கத்தை நமக்குள் கொண்டு வருவார். ஆவியானவர் தான் இயேசுவைப் போலப் பாடுகளைச் சகித்துக்கொள்ள நமக்கு உதவி செய்வார். ஆவியானவர் பிதாவின் சித்தத்தை அறிந்து கொள்ள உதவி செய்வார். நாம் பரிசுத்த ஆவியினால் முழுமையாக நிரப்பப்பட வேண்டும். இயேசுவுக்கும், பிதாவானவர் அளவில்லாமல் அபிஷேகத்தைக் கொடுத்திருந்தார்.







செய்தி:
மோகன் சி. லாசரஸ்

## இயேசுவின் வாழ்க்கையைப் பாருங்கள்...



முதலாவதாக, லூக்கா 1:35-ல் தேவதூதன் மரியாளிடம் கூறுகிறார்: பரிசுத்த ஆவியானவர் உன்மேல் நிழலிடுவார். பரிசுத்த ஆவியானவரினால், இயேசு கிறிஸ்து மரியாளின் கர்ப்பத்தில் உருவாக்கப்பட்டார்.

இரண்டாவதாக, லூக்கா 3:21-22-ல் ''ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று ஜெபம்பண்ணுகையில்...'' என்று எழுதப்பட்டுள்ளது. ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றபின் கலைந்து சென்றனர். ஆனால், இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகும் ஜெபம் பண்ணினார். அவர் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, வானம் திறக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல் அவர்மேல் வந்திறங்கினார்.

மூன்றாவதாக, லூக்கா 4:1-ல் இயேசு பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய், ஆவியானவராலே வனாந்தரத்திற்கு நடத்தப்பட்டார். 14-ம் வசனத்தைப் பாருங்கள்: ''ஆவியானவருடைய பலத்தினால் இயேசு பரிசுத்த ஆவியின் வல்லமையோடு'' ஊழியத்தைத் தொடங்கினார். பிதாவானவர் அவருக்கு அளவில்லாமல் அபிஷேகத்தைக்கொடுத்திருந்தார்.

இந்த அபிஷேகம் மிக முக்கியமானது. கடைசி நாட்களில் தேவன் நமக்கு விசேஷித்த அபிஷேகத்தைத் தருகிறார். யோவான் 3:34ல் அளவில்லாமல், அந்த ஆவியை, பிதாவானவர் கொடுத்திருந்தார்.

அந்த அபிஷேகம் தான் மிகவும் முக்கியம். கடைசி காலத்தில் ''மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்'' என்று சொல்கிறார். நம் மேல் பரிசுத்த ஆவியை ஒரு பெருவெள்ளத்தைப் போல அவர் ஊற்றுகிறார். ''ஆண்டவரே, எனக்கு அந்த அபிஷேகத்தைத் தாரும்; என்னையும் உமது ஆவியினால் நிரப்பும்'' என்று கேட்க வேண்டும்.

இயேசுவின் ஊழியம் இவ்வளவு மகிமையாக இருந்ததற்குக் காரணம் அபிஷேகம்! லூக்கா 4:18-ல் இயேசு சொல்கிறார்: ''கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அவர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நறுங்குண்டவர்களை குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடர்களுக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், தேவன் என்னைப் பரிசுத்த ஆவியினால் நிரப்பினார்'' என்று. அந்த அபிஷேகம் தான் அவரை நடத்தியது. அந்த அபிஷேகம் நம்மை எழுப்புதலுக்குத் தயார்படுத்துகிறது. நீங்கள் எந்தக் காரியம் செய்ய வேண்டுமானாலும் உங்களுக்கு ஒரு அபிஷேகம் தேவை. அதற்கு, ''ஆண்டவரே, எனக்கு அபிஷேகம் தேவை; உம்முடைய பரிசுத்த ஆவியினால் என்னை அளவில்லாமல் நிரப்பும்'' என்று கேட்க வேண்டும். இயேசுவுக்கு அந்த அபிஷேகம் அளவில்லாமல் ஊற்றப்பட்டது. இதுவே அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் வெற்றியின் ரகசியம். இந்த அபிஷேகம் மிகவும் முக்கியமானது.

ஒவ்வொரு நாளும் புதிய அபிஷேகம் தேவை. முந்தின நாளின் அபிஷேகத்தை இன்றைய நாளுக்குப் பயன்படுத்த முடியாது. ஒவ்வொரு நாளும் உங்களுக்குப் புதிய அபிஷேகமும், புதிய பாஷையும் தேவை. தேவன் ஒவ்வொரு நாளும் அபிஷேகத்தைப் புதுப்பிப்பார். அவர் புதிய அபிஷேகத்தையும் புதிய கிருபையையும் தருவார். அதற்காக நாம் காத்திருக்க வேண்டும், வார்த்தையைத் தியானிக்க வேண்டும்; ஜெபிக்க வேண்டும்.

**அன்பான வாலிபர்களே, நீங்கள் அந்த அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிக்கிறீர்களா? "ஆண்டவரே, எனக்கு அபிஷேகம் தேவை, நான் உம்மைப் போலவே வாழ விரும்புகிறேன்" என்று தாகத்தோடு கேட்கும்போது, உங்களையும் அளவில்லாமல் நிரம்பி வழியும்படி செய்வார். அப்பொழுது நீங்களும் இயேசுவைப் போல வாழ முடியும்.**




முகப்பு செய்தி: சதீஷ்

# நிரம்பி வழியும் ஆசீர்வாதம்!

இன்றைய வாலிப பருவத்தில் இருக்கும் எல்லோருடைய எதிர்பார்ப்பும் ஒன்றுதான், ''என் வாழ்க்கையில் செட்டில் ஆகணும், நல்ல வேலை, நல்ல சம்பளம், அந்தஸ்து என இவை எல்லாம் குறிப்பிட்ட நாட்களுக்குள் நிறைவேற வேண்டும்'' என்ற எதிர்பார்ப்பு பலருக்கும் உண்டு. இது ஒருபுறம் இருந்தாலும், அநேகருக்குள் எதிர்காலத்தைக் குறித்த பயமும், கலக்கமும், என் தேவைகள் எப்போது தீரும் என்ற மனவேதனை மற்றும் ஏக்கம் மறுபுறம் இருக்கிறது. எது எப்படியோ? உங்கள் எதிர்காலத்தை ஆசீர்வாதமாக மாற்றத் தேவனால் ஆகும். ஆசீர்வாதம் என்பது ஏதோ தற்செயலாக நடப்பது அல்ல, நீங்கள் எடுக்கும் பிரயாசத்திற்கு ஏற்ப உண்டாகும் பலனாகும்.

தீர்க்கதரிசி எலிசாவின் காலத்தில் ஒரு விதவை இருந்தாள், அவளுடைய கணவர் இறந்தபின், கடன் கொடுத்தவர்கள் அவளுடைய இரண்டு மகன்களையும் அடிமைகளாகக் கொண்டு போக வந்தார்கள். அப்பொழுது அவள் எலிசாவிடம் முறையிட்டபோது, எலிசா அவளை நோக்கி ''நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான்'' (2 இராஜா. 4:2). அதற்கு அவள் ஒரு குடம் எண்ணெய்யே அல்லாமல் வேறு ஒன்றும் இல்லை என்றாள்

தன்னிடம் இருப்பதை மறைக்காமல் சொன்னபடியால் ஆண்டவர் ஒரு குடம் எண்ணெய்யைக் கொண்டு அநேக பாத்திரங்கள் நிரம்பி வழியும் படி ஆசீர்வதித்தார். உங்களிடம் இருக்கும் திறமைகள், படிப்பு இவற்றை ஆண்டவரிடத்தில் கொடுத்தால் போதும் அதை அவர் ஆசீர்வாதமாக மாற்றுவார். ஆசீர்வாதம் என்பது உங்களிடம் இருப்பதிலிருந்து தொடங்குகிறது என்பதை மறவாதீர்கள். அவர் எலிசாவின் ஆலோசனையைக் கேட்டுக் கீழ்ப்படிந்து மிகுந்த பிரயாசப்பட்டு காலி பாத்திரங்களை வாங்கினாள், அவர்களுடைய பிரயாசத்திற்கு ஏற்றபடி ஆண்டவர் அவள் பாத்திரங்களை நிரம்பி வழியும்படி ஆசீர்வதித்தார்.



வாழ்க்கையில் சில சமயங்களில் நாம் எவ்வளவு போராடினாலும் தோல்விதான் சந்திக்க நேரிடும். வெற்றியைப் பார்க்க முடியாது. பேதுருவும் அவனது நண்பர்களும் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒரு மீனும் கிடைக்கவில்லை, அவர்களின் படகு வெறும் படகாகத்தான் இருந்தது. நல்ல அனுபவம், உழைப்பு எல்லாம் இருந்தும் ஒரு மீனும் அகப்படவில்லை. பேதுருவும் அவருடைய நண்பர்களும் தங்களுடைய படகில் இயேசுவுக்கு இடம் கொடுத்து அவர் சொன்ன ஆலோசனையின்படி படகை ஆழத்தில் கொண்டு போய் வலைகளைப் போட்டபோது, தங்கள் வலை கிழிந்து போகத்தக்கதாக மீன்களைப் பிடித்தார்கள். இப்பொழுது மற்ற படகில் உள்ள கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிக்கு சைகை காட்டினார்கள். அவர்கள் வந்து இரண்டு படகுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள்.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் வாலிபர்களே, உங்கள் சூழ்நிலைகளைக் கண்டு சோர்ந்து போகாமல், உங்களிடம் இருக்கும் தாலந்துகளை வைத்து ஆண்டவரின் சொல்படி செய்யும்போது, உங்களை ஆண்டவர் அநேகருக்கு ஆசீர்வாதமாக வைப்பார். உங்கள் சுயபுத்தியின் மேல் சாயாமல் ஆண்டவரின் வார்த்தைக்கும் வழிகாட்டுதலுக்கும் நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கும்போது, உங்கள் வாழ்வில் நிரம்பி வழியும் ஆசீர்வாதத்தைப் பார்க்க முடியும்.

**எனக்கு அன்பான வாலிபர்களே, நீங்கள் Comfort சூழ்நிலையில் இருந்தால் பெரிய ஆசீர்வாதங்களை உங்கள் வாழ்வில் பார்க்க முடியாது. உங்களது படிப்பு, திறமை, வேலை, ஆவிக்குரிய வாழ்க்கை போன்றவற்றில் நிரம்பி வழியும் ஆசீர்வாதத்தைக் காண வேண்டுமானால், உங்கள் வாழ்க்கை என்னும் படகில் இயேசு இருக்க வேண்டும். அப்போதுதான் நிரம்பி வழிகிற ஆசீர்வாதத்தை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.**





நிகழ்வு: ஜெனிபர்

# அழுத்தத்தின் கீழ்

Hi friends. எல்லாரும் எப்படி இருக்கீங்க? அழுத்தத்தின் கீழ் என்னும் இத்தொடரில் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

ஒவ்வொரு மாதமும் இத்தொடரில், உடைக்கப்பட்டு, உருமாற்றப்பட்டு, உருவாக்கப்படும் பொருளின் முக்கியத்துவத்தையும், பயன்பாட்டையும், அது எவ்வளவு விலையேறப்பெற்றதாய் மாறுகிறது என்பதையும் நாம் பார்த்து வருகிறோம்.

இம்மாதம் மண்பானை செய்யும் முறைபற்றிப் பார்ப்போமா?

ஒரு களிமண் சாதாரணமாக மண்பானையாய் உருமாற முடியாது. அது எவ்வளவு அழுத்தத்தின் கீழ் போக வேண்டியது உள்ளது என்பதை பற்றிப் பார்ப்போம்.

## மண் பானை செய்யும் முறை

களிமண்ணில் பானை செய்வது தமிழ்நாட்டின் பாரம்பரிய கைவினை. அது 5,000 வருட பழமையான தொழில்.

### தேவையான பொருட்கள்:

வயல், குளக்கரை களிமண், மணல் கலக்காத கருப்பு/சிவப்பு களிமண், சக்கரம், தண்ணீர், டிசைன் போடச் சுள்ளான் கருவி, சூளை, பானையை சுட வைக்கோல், விறகு அடுப்பு

## செய்முறை

**மண் பதப்படுத்தல்:** களிமண்ணை 2 நாள் தண்ணீரில் ஊற வைத்து, கல், குச்சியை நீக்கியபின், சப்பாத்தி மாவு பதம் வரும் வரை காற்று குமிழி இல்லாமல், காலால் மண்ணை நன்கு மிதிப்பார்கள்.

**குழைத்தல்:** மண்ணை நன்கு உருட்டி, உருண்டை வடிவமாக மாற்றுவார்கள்.

**சக்கரத்தில் வைத்தல்:** உருண்டையைச் சக்கரத்தின் நடுவில் வைத்து, சக்கரத்தை விடாமல் சுற்றுவார்கள்.

**உருவம் கொடுத்தல்:** இரண்டு கைக்கட்டை விரலை நடுவில் வைத்து அமுக்கி, உள்ளங்கை வெளியே இருக்கும்படி விரலை உள்ளே வைத்து வடிவமைப்பார்கள்.

**கழுத்து வைத்தல்:** மேல் விளிம்பை வெளிபுறம் மடக்கி, கழுத்து வைப்பார்கள். கை விரலால் அழுத்தியும் அழகுப்படுத்துவார்கள்.



**வெட்டி எடுத்தல்:** சக்கரத்திலிருந்து கம்பி வைத்து அறுத்து, ஒரு தட்டையில் வைப்பார்கள்.

**நிழலில் உலர்த்தல்:** 2 நாள் நிழலில் மெதுவாகக் காய வைப்பார்கள்.

**மெருகேற்றுதல்**: கூழாங்கல்லால் தேய்த்து பளபளப்பாக்கி, டிசைன், பூ ஆகிய வேலைப்பாடுகளைச் செய்வார்கள்.

**சுடுதல்:** வைக்கோல், வறட்டி, விறகு ஆகியவற்றை வைத்துச் சூளையில் அடுக்கி 8 மணி நேரம் **800°C-1000°C** வைத்துச் சுடுவார்கள். சூடு ஆறின பிறகு எடுப்பார்கள்.

மண் பானை சமையல், உடலுக்கு நல்லது. இயற்கையாகக் குளிர்ச்சி தரும்; ஆவி வெளியே போகும்; சத்து உள்ளேயே இருக்கும். **Calcium** போன்ற சத்துக்கள் தண்ணீரில் சேரும். இப்படி அதின் பயன்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். பார்த்தீர்களா!

**Friends?** களிமண்ணுக்கு வந்த வாழ்வை! அது அத்தனை கடினமான நிலையையும் சகித்ததால்தான் ஒரு அழகான பானையாய் மாற முடிந்தது.

பானை செய்ய மண் பதம் ரொம்ப அவசியம் **Friends.** மண் ரொம்ப இளகினால் பானை உட்கார்ந்துவிடும். கெட்டியாக இருந்தால் வெடித்துவிடும். அதனால் தான் குயவன் அதைத் தன் காலால் மிதிக்கிறார். அதேபோல் தான் நாமும் இளகிய மனதுடையவர்களாக இருந்தால், கடினமான சூழ்நிலை வரும்பொழுது செயலற்று போய்விடுவோம். கடினமான மனம் உடையவர்களாக இருந்தால், அச்சூழலில் நம் சுய புத்தியின் மேல் சார்ந்து தவறான முடிவுகளை எடுத்து விடுவோம். அச்சூழலில் நம்மைத் திடமுள்ளவர்களாய் நிற்கச்செய்யவே, தேவன், குயவன் காலால் மண்ணை மிதிப்பது போன்ற அழுத்தமான சூழலை அனுமதிக்கிறார். அதன் முடிவு மகிமையே.

எப்படி ஒன்றுக்கும் உதவாத களிமண் பானையாய் உருமாற தண்ணீர் முக்கியமோ, அதுபோல் நாமும் உருமாற்றப்பட பரிசுத்த ஆவியானவர் முக்கியம்.

கூழாங்கல் பானையை பளபளபாக்குவது போல, சில கடினமான சூழ்நிலைகள் நம்மை உரசி கிறிஸ்துவின் சுபாவத்தை நம்மில் வெளிப்படச் செய்யும்.

எப்படி இறுதியில் பானையை சுடும்பொழுது, அது கெட்டியாய் மாறுகிறதோ, அப்படியே சிறு பிரச்சனைகளுக்கும் நிலைகுலைந்து போகிற நாம்,

**இறுதியில் அசையாது திடமுள்ளவர்களாய் நிற்போம். அதற்காகவே தேவன் நம் வாழ்வில் அக்கினிச் சூளைகளை அனுமதிக்கிறார்.**

**இறுதியில் நாம் தேவனுடைய கரங்களால் எடுத்துப் பயன்படுத்தப்படுகிற அழகான பாத்திரமாய் மாறி இருப்போம். எனவே களிமண்ணை போல நம்மையும் ஒப்புக்கொடுப்போம்.**

தொடரும்...



# அறிவியலும் வேதாகமமும் 3

தகவல்: ஜெனிபர்


**Hello friends,**

**எல்லாரும் எப்படி இருக்கீங்க? அறிவியலும் வேதாகமமும் என்னும் இத்தொடரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**

**பிறரை பாதுகாக்கிற ஒரு பொருளைப் பற்றி இந்தத் தொடரில் பார்க்கப் போகிறோம்.**

ஒரு **apple piece**-ஐ **Cut** பண்ணி அதைச் சாப்பிடாமல் அப்படியே வைத்திருந்தால் என்ன ஆகும்? ஒரு 5 நிமிடங்களுக்குள் அது **Brown Colour**-ஆக மாறிவிடும் அப்படித்தானே? அதுவே **apple**-ஐ **Cut** பண்ணினதும் உப்பு தண்ணீரில் போடுங்களேன். அது **Colour** மாறாம அப்படியே இருக்கும்.

ஆப்பிள் கலர் மாறாம இருக்க காரணம் இதுதான்.



**Apple**-ஐ **Cut** பண்ணினதும் காற்றில் இருக்கும் **Oxygen** அதின் மேல்பட்டு கலர் மாறும், இது **Oxidation**. அதுவே உப்பு நீரில் போடும்போது உப்பு ஒரு **Layer**-ஆக ஆப்பிளைச் சுற்றி **Form** ஆகும். அதனால் **Oxygen** ஆப்பிள்மேல் படாது. **Apple**-ல இருக்கிற **Colour** மாறக் காரணமாய் உள்ள **Enzyme**-ஐ, உப்பு வேலை செய்ய விடாது. இந்தத் துண்டுகள் பல மணிநேரங்கள் புத்துணர்ச்சியுடனும், பொலிவுடனும் இருக்கும்; பின்பு தேவைப்படும்போது உப்பு தண்ணீரிலிருந்து எடுத்துக் கழுவி உண்ணலாம் உப்புச் சுவை இருக்காது.

இதுபோலத் தான் **friends**, நாமும் உப்பைப் போல உலகத்தால் கரைப்பட விடாதபடி, பிறரை பாதுகாத்து, பரிசுத்த பாதையைக் காட்டுகிறவர்களாய் இருக்க வேண்டும்.

உப்பு ஏன் தண்ணீரில் கரைகிறது? உப்பு **NaCl**-என்ற ஒரு **ionic compound;** நீர் **H2O**-என்ற molecules அடங்கிய **compound.** உப்பை நீரில் போட்டதும், உப்பில் இருக்கும் **Sodium(Na)**-கும், **Chloride(-Cl)**-கும் நடுவில் உள்ள இணைப்பு அறுபட்டு, இவர்கள் நீரில் இருக்கும் **H2O molecule** கூட இணைவார்கள். அதாவது **Sodium - Oxygen**னோடும் மற்றும் **chloride - H2O**வோடும் இணைக்கப்படும். அதனால் தான் உப்பு தண்ணீரில் கரைந்து, நம் பார்வைக்கு தண்ணீர் மட்டும் தெரிகிறது.

இந்தத் தண்ணீர் தான் பரிசுத்த ஆவியானவர் நாம் அவருக்கு இடம் கொடுக்கும்பொழுது உலகத்தின் பிணைப்பு அறுபட்டு, அவரோடு கூட நெருங்க ஆரம்பித்து விடுவோம். அப்பொழுது நாம் அவருக்குள் முழுவதும் மறைந்து கொண்டு அவரை வெளிப்படுத்த ஆரம்பிப்போம். அவர் நம்மிலிருந்து மகிமைப்படுவார். யோவான் ஸ்நானகனை போல் பயன்படுத்தப்படுவோம்.

இதனால் தான் **friends,** மத்தேயு 5:13 ல் **"நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்"** என்று இயேசு சொல்கிறார். நாமும் உப்பாய் இருந்து நரகத்தின் வழியிலிருந்து மற்றவர்களைப் பாதுகாக்கிறவர்களாய் மற்றும் நம்மை ஆண்டவருக்குள் மறைத்துக் கொண்டு இயேசுவை உலகிற்கு வெளிப்படுத்துகிறவர்களாய் இருப்போம்.




# ஜூன் 21 தந்தையர் தினம்

1910 ஆம் ஆண்டு ஜூன் 19-ந் தேதி முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. தாய் இல்லாமல் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்த அமெரிக்காவைச் சேர்ந்த சொனாரா ஸ்மார்ட் டாட் என்ற பெண் தந்தையர் தினத்தைத் தோற்றுவித்தார்.

- தன் துக்கத்தையும், வேதனையையும் வெளிக்காட்டாமல் தன் கடமைகளை எல்லாம் செய்பவர் தந்தை. அம்மாவுக்குப் பிறகு நம் மனதுக்கு மிக நெருக்கமானவர் என்றால் அது நம் அப்பாதான்.
- தந்தையின் அன்பு அன்னையைப் போல் இல்லை, ஆனால் அப்பாதான் நம்மை உள்ளிருந்து வலிமையாக்குகிறார்.
- நல்லது கெட்டது பற்றித் தந்தை நமக்குப் பாடம் நடத்துகிறார். நம் தந்தையின் கை நம் நெற்றியில் இருக்கும் வரை நாம் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை.
- எப்பொழுதும் துக்கத்தை தனக்குள்ளேயே வைத்துக்கொண்டு நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறார்.
- குடும்பத்தைப் பொறுப்பாக வழிநடத்தி, தன்னலமற்ற அன்பின் அடையாளமாகத் திகழும் தந்தைகள் ஒவ்வொருவரும் ஆண்டு முழுவதும் கொண்டாடப் பட வேண்டியவர்களே!

நாம் வாழ்க்கையில் அப்பாவின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு குழந்தையும் தனது தந்தைக்கு நன்றி செலுத்த வேண்டும்.

**நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள் (நீதி.20:7).**

தகவல் : ஜோயல்

# Soul Detox

# தள்ளிப்போடுதல்!

## PROCRASTINATION



**"அப்பறம் பாத்துக்கலாம். நாளைக்கு பண்ணலாம்..." என்ற மனநிலை இந்தக் கடைசி காலங்களில் இளம் வாலிபர்களுக்குள் பெருவாரியாகக் காணப்படுகிறது... இது நம் ஆத்தும பெலனை உறிஞ்சி, மன அழுத்தத்தையும், குற்றவுணர்வையும் ஏற்படுத்தி, நம் தன்னம்பிக்கையை இழக்கப்பண்ணுகிறது. காலப்போக்கில், இது நம் வாழ்க்கையின் நோக்கத்தையே பலவீனப்படுத்தி, நமக்குள் "எதற்காக வாழுகிறோம்?!" என்ற குழப்பத்தை உண்டாக்கிவிடுகிறது.**

**இது ஒரு சாதாரண பழக்கமாய் தோன்றினாலும், நம் தனிப்பட்ட வளர்ச்சியைத் தடுக்கும், உறவுகளுக்குள் முறிவை ஏற்படுத்தும், பல அறிய வாய்ப்புகளை இழந்துப்போகப்பண்ணும். இந்த மனநிலையை உண்டுபண்ணி உங்களைத் திசை மாறப்பண்ணுவது தான் பிசாசின் தந்திரம்! - இன்று உங்களுக்கு இதிலிருந்து ஒரு விடுதலை அவசியம்!**

**இந்த மனநிலை உருவாக அடிப்படை காரணம் - பயம், சரியான வழிகாட்டுதல் இல்லாமை. அதைவிட முக்கியமான காரணம், எல்லா காரியத்திலும் Perfection எதிர்பார்த்து, அதைச் செய்யவே தவறிவிடுகிறோம். நம் தேவன் அதினதின் காலத்தில் அனைத்தையும் நேர்த்தியும் செம்மையாகச் செய்கிற தேவன். அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அவரைப்போலவே ஒவ்வொரு காரியத்தையும் ஒழுங்கும் கிரமமுமாகச்**

செய்யவேண்டியது அவசியம். அதே நேரத்தில் '5 அப்பம் 2 மீன்'-ஐ ஆசீர்வதித்து ஐயாயிரம் பேருக்கு ஆசீர்வாதமாய் மாற்றியவர் கர்த்தர். அப்போ, ஒரு காரியத்தை நேர்த்தியாய் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நமக்கு இயன்றதை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து (சங். 37:5) அதைச் செய்யும்போது தேவன் அதை ஆசீர்வதித்து அதை முழுமைப்படுத்துவார்! நாம் செய்யவேண்டியதை செய்தால், தேவன் அவர் செய்யவேண்டியதை செய்வார்!




## மேற்கொள்ளும் வழிமுறைகள்:

முதலாவது, நீங்கள் எதைச் செய்வதை தவிர்க்கிறீர்கள், தாமதிக்கிறீர்கள், எதற்காகத் தள்ளிப்போடுகிறீர்கள் என்பதைக் கண்டறியுங்கள். இரண்டாவதாக, "பிறகு செய்து கொள்ளலாம்" என்பதற்குப் பதிலாக, "சிறிய காரியமானாலும், இப்போதே தொடங்குவேன்" என்று உங்கள் மனநிலையைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். மூன்றாவதாக, உங்கள் வாழ்க்கையின் நோக்கத்தையும், நீங்கள் தள்ளிப்போடுகிற காரியத்தின் நோக்கத்தையும் நியாபகப்படுத்திக்கொள்ளுங்கள். - "Purpose fuels action!" இவைகளை ஜெபத்தோடும், வேத வாசிப்போடும் செய்யும்போது சரியான ஆலோசனைகளைத் தேவனிடத்திலிருந்து பெற்று இதை எளிதாக மேற்கொள்ள முடியும்!

**இதை வாசிக்கிற உங்களுக்குத் தேவன் பல தாலந்துகளை கொடுத்திருக்கிறார். நாட்கள் பொல்லாதவைகளாதலால் காலத்தைப் பிரயோஜனப்படுத்துங்கள். உங்கள் தாலந்துகளை தேவனுக்கென்று உபயோகப்படுத்துங்கள்! அவனவனுடைய கிரியைக்குத் தக்கதாய் பலனளிக்க ஆண்டவர் இயேசு சீக்கிரமாய் வருகிறார்!**





சிந்திக்க : ரூத்

# நிரம்பின பாத்திரங்கள்:

## கற் சாடிகள்:



கானாவூர் கலியாண வீட்டில், இயேசு வேலைக்காரரிடம் வீட்டின் வெளியே வைக்கப்பட்டிருந்த ஆறு கற்சாடிகளை தண்ணீரினால் நிரப்பச் சொன்னார். அவர்கள் உடனடியாகக் கீழ்ப்படிந்து, ஜாடிகள் நிறைய தண்ணீரினால் நிரப்பினார்கள். அது பரிமாறப்படும்பொழுது, திராட்சை ரசமாக மாறி இருந்தது. அதிக சுவையுள்ளதாகவும் இருந்தது. சந்தேகப்படாமல், கேள்விகேட்காமல் சொன்னதை செய்ததால், பாத்திரங்கள் நிரம்பியது (யோவான் 2:7).

**அன்பான வாலிபர்களே, அதுபோல மண்பாண்டங்களாகிய நம்முடைய பாத்திரமும் நிரப்பப்பட, கர்த்தரின் வார்த்தைக்கு உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டும். (வாசிக்க யோவான் 2:1-7).**

## கூடைகள்:

ஒரு மலையின் மேல் பிரசங்கம் பண்ணின இயேசு, ஜனங்களைக் கண்டு பரிதபித்து, அவர்களுக்கு உணவு வழங்கச் சீஷர்களிடம் கேட்டார். சீஷர்கள் ஒரு சிறு பையனைக் காட்டியபொழுது, 5 அப்பத்தையும் 2 மீனையும் நன்றி நிறைந்த இருதயத்தோடு இயேசுவிடம் கொடுத்தான். இயேசு அதனை எடுத்து, பிதாவை நோக்கி ஸ்தோத்திரம் பண்ணி பரிமாறச் சொன்னார். அங்கிருந்த அனைவரும் உண்டு மீதம் 12 கூடை நிறைய எடுத்தார்கள் (யோ. 6:11).



**அன்பான வாலிபர்களே, தாவீது என் பாத்திரம் நிரம்பி வழிகிறது என்று சொன்னதற்கு, அவர் கர்த்தருக்கு அதிகமாக ஸ்தோத்திரம் செலுத்தினதே முக்கிய காரணம். நாம் ஸ்தோத்தரிக்கும்போது நம்முடைய பாத்திரமும் கர்த்தருடைய வார்த்தையினாலும் பிரசன்னத்தினாலும் நிரப்பப்படும் (வாசிக்க யோவான் 6, சங். 46)**

## பானை:



தேவ மனிதனாகிய எலியா பஞ்சக்காலத்தில், சாரிபாத் விதவையினிடத்திற்கு கர்த்தரால் அனுப்பப்பட்டபோது, அந்தப் பெண்ணிடம் ஒரு பானையில் மாவும் கொஞ்சம் எண்ணெயும் தவிர வேறு ஒன்றும் இல்லாதிருந்தது. மரணத்திற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்த அவளிடம் எலியா மூலம் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்கிறார். அந்த வார்த்தையின் மீது விசுவாசம் வைத்ததால், அவளும் மகனும் பஞ்சக்காலத்தில் காப்பாற்றப்பட்டார்கள். பானையில் எண்ணெயும் மாவும் குறையவே இல்லை; அது நிரம்பி வழிந்தது (1 இராஜா. 17:16).

**அன்பான வாலிபர்களே, சந்தேகப்படாமல், கவலைப்படாமல், சோர்ந்து போகாமல் கர்த்தரையும் அவர் வார்த்தையையும் விசுவாசிக்கும்போது, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் நிரம்பி இருப்போம். (வாசிக்க 1 இராஜா. 17:8-16)**

## குடம்:

ஒரு தீர்க்கதரிசியின் மனைவி தன் கணவன் மரித்தபின் கடன் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டவளாய், என் கணவர் மரித்துப் போனார், கர்த்தருக்கு பயந்து வாழ்ந்தார்; இப்போது கடன்காரர் என் 2 பிள்ளைகளையும் அடிமையாக்க வந்திருக்கிறார்கள் என்று எலிசாவிடம் அழுகிறாள். ‘‘உன்னிடத்தில் என்ன இருக்கிறது?’’ என்று எலிசா கேட்க, ஒரு குடம் எண்ணெய் மட்டும் என்னிடம் இருக்கிறது என்று, தன்னிடத்தில் உள்ளதை உள்ளபடி சொன்னாள். எலிசா சொன்னபடி, பக்கத்துக்கு வீடுகளிலிருந்து பாத்திரங்களை வாங்கி வந்து, வீட்டின் கதவை அடைத்து, அவளும் பிள்ளைகளும் பாத்திரங்களை எண்ணையினால் நிரப்பினர். அதனை விற்று கடனை அடைத்துச் சந்தோஷமாக வாழ்ந்தனர்.



**அன்பான வாலிபர்களே, நாமும் நம்மிடம் உள்ளதை உள்ளபடி ஆண்டவரிடம் சொன்னால், நம் உண்மையைக் கண்டு, நம் பாத்திரத்தை பயன்படுத்தி பிறர் பாத்திரங்களையும் நிரப்புவார் (வாசிக்க 2 இராஜா. 4:1-7).**

சாதனை சுமா கிரேஷன்




# சவாலின் சிகரம்!

இனிய இளம் சாதனையாளர்களே, உங்களுக்கு என் அன்பான வாழ்த்துக்கள்!

பெரும்பாலும் வாழ்க்கையில் வாய்ப்புகள் நம்மைத் தேடி வருவதில்லை. வாய்ப்பு வரும் என்று காத்திருப்போம் என்றால், காலமே வீணாகி விடும். ஆனால் நாம் வாய்ப்பைத் தேடி முன்னேறினால், வெற்றியின் உச்சியை நிச்சயம் அடையலாம். தன்னுடைய வாழ்க்கைக்கான வாய்ப்பைத் தானே உருவாக்கி, உலகிற்கு முன்மாதிரியாக உயர்ந்த ஒருவரின் ஊக்கமான பயணம் இதோ உங்களுக்காக.



**John Cronin** அவர்களின் வாழ்க்கை மற்றவர்களைப் போல எளிதானதல்ல. அவர் **Down Syndrome** என்ற உடல் மற்றும் மனவளர்ச்சி குறைபாட்டுடன் பிறந்தார். சிறுவயதிலிருந்தே பல சவால்களை எதிர்கொண்டார். இருப்பினும், தன்னம்பிக்கையை இழக்காமல் முன்னேறினார். பள்ளிப் படிப்பை முடித்ததும், மற்றவர்களைப் போலவே வேலை தேட ஆரம்பித்தார். ஆனால் கிடைத்த வேலைகள் அவருக்கு மனநிறைவை அளிக்கவில்லை.

அப்போது அவர் ஒரு துணிச்சலான முடிவை எடுத்தார்: ‘‘வேலை தேடிக்கொண்டு அலைய மாட்டேன்; நானே வேலையை உருவாக்குவேன்!’’ என்று தன்னுடைய தந்தையுடன் இணைந்து ஒரு தொழிலை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். பல யோசனைகள் முயற்சிக்கப்பட்டன—**Fun Store, Food Truck** போன்றவை. ஆனால் அவை வெற்றியளிக்கவில்லை. தோல்விகள் வந்தபோதும், முயற்சியை அவர் கைவிடவில்லை.




இறுதியில், தமக்குப் பிடித்திருந்த வண்ணமயமான **Socks**-ஐ மையமாகக் கொண்டு **John's Crazy Socks** என்ற நிறுவனத்தைத்

தொடங்கினார். தொழில் தொடங்கிய முதல் நாளிலேயே பெரிய சவால் வந்தது. அவர்களின் **Website** செயலிழந்தது. பலர் அதிலேயே சோர்ந்து இருப்பார்கள். ஆனால் **John** மற்றும் அவரது குழு மீண்டும் எழுந்தனர். சில மணி நேரங்களிலேயே **Orders** வரத் தொடங்கின. அதுவே அவர்களின் வெற்றிப் பயணத்தின் முதல் படியாக அமைந்தது.

அதன் பின் தொழில் வேகமாக வளர்ந்தது. இன்று அந்த நிறுவனம் உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான மகிழ்ச்சிப் புன்னகைகளை பரப்பி வருகிறது.

**John** தற்போது பணம் சம்பாதிப்பதில் மட்டும் கவனம் செலுத்தவில்லை. தன் வருமானத்தின் ஒரு பகுதியை **Special Olympics** அமைப்பிற்கு நன்கொடையாக வழங்குகிறார். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி வருகிறார். **Awareness Socks** மூலம் சமூக விழிப்புணர்வையும் உருவாக்கி வருகிறார்.





இந்தக் கதையை வாசிக்கும் இளைஞர்களே, Down Syndrome என்பது பெரிய சவாலாக இருக்கலாம். ஆனால் John தனது குறையை எண்ணி பின்னடைந்தவர் அல்ல; அதை வெற்றியாக மாற்றியவர். தன்னுடைய வாழ்க்கையை மட்டுமல்ல, பலரின் வாழ்க்கையையும் உயர்த்தியவர்.

குறைபாடு உடலில் இருந்தால் பரவாயில்லை; மனதில் இருக்கக் கூடாது. மனதில் குறைபாடு இருந்தால் உயர முடியாது. நமக்கான பாதையை நாம் உருவாக்கிக் கொண்டு, அதில் தைரியமாக நடக்கத் தொடங்குவோம்... John போல!

REVIVAL IGNITERS *Live*

ஜூன் 28
(ஞாயிற்றுக்கிழமை)

ஒவ்வொரு மாதமும் திறப்பின் வாசலுக்கு (கடைசி சனி) அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி முதல் 5.30 மணி வரை, இயேசு விடுவிக்கிறார் சமூக வலைத்தளங்கள் {YouTube (Jesus Redeems Official & Youth Trendz) மற்றும் Facebook} .வழியாக நேரலையில் பார்க்கலாம்..





இந்த நிகழ்ச்சியை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அவர்களையும் இணைத்து, ஆவிக்குரிய புதுப்பொலிவை அனுபவிக்கச் செய்யுங்கள்.

# சமூகத்தின் அப்பங்கள்

மிஷனெரி பயணம் : ரூத்

ஒரு காலத்தை நினைத்துப் பாருங்கள்... அது 1800-களின் காலம். அப்போது விமானங்கள் இல்லை. கடலுக்கு அப்பால் செல்ல, கப்பல் பயணம் மட்டுமே. குடும்பத்தை விட்டு வெளிநாட்டுக்கு சென்றவர்கள் பலர் மீண்டும் திரும்பி வர முடியாத காலம் அது.

அக்காலத்தில், எலென் அர்னால்ட் (Ellen Arnold) என்ற இளம்பெண் பிரிட்டிஷ் ஆண்ட இந்தியாவில், கிழக்கு வங்காளத்தில் (தற்போதைய பங்களாதேஷில்) தேவ ஊழியம் செய்ய, 4 ஆஸ்திரேலிய பாப்டிஸ்ட் பெண்மணிகளுடன் வந்தார். தங்களுடைய 20 வயதுகளில் இருந்த இந்த 5 பெண்களும், இந்தியாவில் ஆண்டவருக்கு பிரியமில்லாத ஆராதனை செய்பவர்கள் மத்தியில், குறிப்பாகப் பெண்கள் மத்தியில், உண்மையான தேவனை அறிவிக்க மிஷனெரிகளாகப் புறப்பட்டனர்.

எலென் இங்கிலாந்தில் பிறந்தவராயிருந்தாலும், 1879ஆம் ஆண்டில் அவரது குடும்பம் தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள அடெலெய்ட் என்னும் ஊருக்குப் புலம்பெயர்ந்தது. அவர் அங்கு ஆசிரியராகப் பணி புரிந்து வந்தார். அந்நாட்களில், கிழக்கு வங்காளத்தில் உள்ள "ஃபரீத்பூர் மிஷன்"-ஐ சேர்ந்த புன்சனோன் பிஸ்வாஸ் (Punchanon Biswas), தெற்கு ஆஸ்திரேலியாவிற்கு சென்று, அங்குள்ள சபைகளிடம் தங்கள் பெண்களை இந்தியாவிற்கு ஊழியர்களாக அனுப்ப ஊக்குவித்தார். அது எலெனுடைய அழைப்பை உறுதிப்படுத்தியது.

ஒரு சிறிய மருத்துவ பயிற்சிக்குப் பின், 1882ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள ஃபரீத்பூரை வந்தடைந்ததும், உள்ளூர் மொழியில் தனது பயிற்சியைத் துவங்கினார் எலென். ஆனால் ஒரு கடுமையான சரீர பெலவீனம் தாக்க, 1884ஆம் ஆண்டில் அவர் ஆஸ்திரேலியா திரும்ப நேரிட்டது. எனினும், கிறிஸ்துவை சேவிக்க கொழுந்துவிட்டு எரிந்த அவரது வாஞ்சையினால், தனக்கு ஊழியத்தில் உதவுமாறு, மேலும் 4 பெண் ஊழியர்களுடன் 1885ஆம் ஆண்டில் அவர் மறுபடியும் வங்காளத்திற்கு வந்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 5 அப்பம் 2 மீன்களைக் கொண்டு பெருங்கூட்டத்தைப் போஷித்த அற்புதத்தைக் குறிக்கும் வகையில், இந்த ஐந்து பெண்கள் "The Five Barley Loaves" (ஐந்து வாற்கோதுமை அப்பங்கள்) என அன்புடன் அழைக்கப்பட்டனர். இவர்கள் புறப்பட்டுச் சென்று, பெண்களுடன் உட்கார்ந்து பேசினார்கள்; ஜெபித்தார்கள்; வேதாகமம் கற்றுக்கொடுத்தார்கள்; மெதுவாக இதயங்கள் திறக்கத் தொடங்கின.



எலென், ஃபரீத்பூரில் மருத்துவம், கல்வி மற்றும் கட்டுமான பணிகளைக் கண்காணித்தார். 1886ஆம் ஆண்டில் குமில்லா என்னும் ஊருக்கு இடம் பெயர்ந்து, அங்கு ஒரு பணி தளத்தைத் துவங்கினார். பின்பு அவர் பாப்னா மற்றும் அட்டாய்குலா என்னும் ஊர்களில் ஊழியம் செய்து, அங்குத் தொடர்ச்சியாகச் சுவிசேஷத்தை அறிவித்து, பல பள்ளிகளையும், மக்கள் நலத்திற்கான வைத்தியசாலைகளையும் நிறுவினார். அவர் சேவை கருதி உள்ளூர் மக்கள் அவர்பேரில் மிகவும் அன்பு பாராட்டினர். பின்பு 1930ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவிற்கு ஒரு சிறிய பயணம் மேற்கொண்டு, மறுபடியும் அட்டாய்குலாவிற்கு திரும்பிய எலென் ஆர்னால்ட், 1931ஆம் ஆண்டில், தான் மரணமடையும் வரை ஊழிய பாதையைத் தொடர்ந்தார்.

## எலன் அர்னால்ட் பற்றி முக்கிய தகவல்கள்:

தெற்கு ஆஸ்திரேலிய பாப்டிஸ்ட் மிஷனரி சொசைட்டி சார்பில், அக்டோபர் 1882-ல் இந்தியாவின் ஃபரீத்பூர் (Faridpur) பகுதிக்குச் சென்றார்.

இந்தியாவில் பெண் மிஷனரிகள் ஊழியம் செய்வதற்கான பாதையை வகுத்தவர். குறிப்பாக, உள்ளூர் பெண்கள் மத்தியில் சுவிசேஷத்தைக் கொண்டு சேர்ப்பதில் அதிக பாரம் கொண்டிருந்தார்.

இந்தியாவில் கடுமையான சவால்களைச் சந்தித்த அவர், உடல்நலக்குறைவு காரணமாக 1884-ல் ஆஸ்திரேலியா திரும்பி, மீண்டும் வந்து பணிசெய்தார். அவர் இந்தியாவில் 49 ஆண்டுகள் மிஷனரி சேவை செய்தார். அவர் மரிக்குமுன் சொன்ன மூன்று வார்த்தைகள்: "Tell them to preach" (அவர்களை பிரசங்கிக்க சொல்லுங்கள்).



*"Tell them to preach"*

### இன்றைய இளைஞர்களுக்கான சவால்:

இந்த பெண்கள் சாதாரண மனிதர்கள் தான். அவர்கள் புகழ்பெற்றவர்கள் அல்ல; பெரிய அதிகாரம் கொண்டவர்கள் அல்ல; ஆனால் அவர்கள் தேவ திட்டத்திற்கு தங்களை அர்ப்பணித்தவர்கள். அதனால் தேவன் அவர்களைப் பயன்படுத்தினார். இன்று கர்த்தர் மீண்டும் கேட்கிறார்: யார் போவார்கள்? யார் பேசுவார்கள்? யார் இந்த தலைமுறைக்கு சுவிசேஷத்தை சொல்லுவார்கள்?

**ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தேவன் அந்த பெண்களை அழைத்தார்.**
**இன்று... அவர் உங்களை அழைக்கிறார்..!**
**அவர் திருப்பணி செய்ய ஆயத்தமா?**

ஆலோசனை: அவி

Heart Beat

# மீண்டும் எழுவேனா?



நான் ஊட்டியில் படித்து முடித்துவிட்டு, சென்னையில் ஒரு IT கம்பெனியில் வேலை செய்கிறேன். நான் தேவனுக்கு கீழ்ப்படிந்து பரிசுத்தமாக வாழ்ந்த ஒரு வாலிபன். தற்பொழுது ஏற்பட்ட நட்பின் நிமித்தமும், தவறான உறவுகள், Cell Phone Addiction மூலம் தவறான காட்சிகளைப் பார்ப்பதற்கு அடிமையாகி விட்டேன். தேவனுக்காக ஊழியம் செய்த நான் இப்பொழுது பாவ குழியில் விழுந்து விட்டேன். பலமுறை மன்னிப்பு, மனந்திரும்புதல் என்று பல முயற்சி செய்தும் ஒரு பிரயோஜனமும் இல்லை. நிரந்தர அடிமையாகி விட்டேன். கம்பெனியில் Night shift வேலை செய்வதும், Morning முழுவதும் செல்போன் பார்ப்பது என்று முடிவு இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறேன். திடீரென்று இப்பொழுது மரித்தால் எங்கே போவேன் என்ற கேள்வி என்னைப் பயத்தில் ஆழ்த்தி விட்டது. நிச்சயம் நரகம் தான் என்ற சத்தம் கேட்கிறது. ஆனால் எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமா?

–ரகு, ஊட்டி.


அன்புத் தம்பி ரகு, உங்களின் வேதனையான வாழ்க்கையைப் பார்க்கும்போது கவலையாகத்தான் உள்ளது. ஆண்டவருக்காக வைராக்கியமாய் வாழ்ந்து ஊழியம் செய்த நீங்கள், இப்பொழுது உதவியின்றி பாவக் குழியில் விழுந்து கிடப்பது வேதனையான ஒன்று.

ரகு, நீங்கள் எவ்வளவு ஆழமான படுகுழியில் வீழ்ந்து இருந்தாலும், இயேசுவின் இரட்சிப்பின் கரம் நிச்சயம் உங்களைத் தூக்கி எடுக்க முடியும். நிச்சயம் நம்பிக்கை உண்டு! நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான்; எந்தக் குழியில் இருந்தாலும் இயேசுவே என்று கூப்பிட்டால் போதும்; இயேசு வந்து நின்று உதவி செய்து தூக்கி விட வல்லவராய் இருக்கிறார்.

ஆனால் பலமுறை விழுந்து விழுந்து எழுந்ததால் உங்களுக்கு இயேசுவை நோக்கிக் கூப்பிட மனம் இல்லை. காரணம், 'எத்தனை முறை மன்னிப்பு கேட்பது எத்தனை முறை மனந்திரும்புகிறேன்' என்று சொல்வது, என்ற மன சோர்வும் மனவேதனையும் உங்களை அமைதிப்படுத்துகிறது. ஆனால் அபயமிட்டால் நிச்சயம் விடுதலை உண்டு. முதலில் குழியிலிருந்து எழும்ப வேண்டும் என்ற உணர்வே தேவன் உங்களுக்குக் கொடுப்பதுதான். பலர் தங்கள் பாவ வாழ்க்கையில் பழகி, ருசித்து விட்டதால் அதிலேயே நிரந்தரமாகத் தங்கி விடுகிறார்கள். ஆனால் எழும்ப வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு இருப்பதற்காகத் தேவனைத் துதிக்க வேண்டும்.

பின்னர் இந்தப் பாவ குழியில் நான் நிரந்தரமாக இருக்க விரும்பவில்லை இயேசுவே, என்னைக் காப்பாற்றும் தூக்கிவிடும் என்று கேட்க ஆரம்பிக்க வேண்டும். உதவி கேட்டால் நிச்சயம் விடுதலை கிடைக்கும்.

இயேசுவே குழியிலிருந்து உங்களை வெளியே தூக்கி விட்டபிறகு, பெற்றுக் கொண்ட விடுதலையை காத்துக் கொள்ள செய்ய வேண்டிய சில காரியம்:



## முதலில் விட வேண்டியவை:

- இரவு நேரங்களில் மொபைல் போன் use பண்ணுவதை தவிர்க்க வேண்டும். தேவை இல்லாமல் ரீசார்ஜ் செய்ய வேண்டாம்.
- வீடியோ பார்ப்பது தான் உங்கள் பிரச்சனை என்றால்; அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய செயல்களைச் செய்ய வேண்டும்.
- **Unwanted App**பை **Delete** செய்ய வேண்டும். அதாவது வீடியோ பார்ப்பதற்காக **Download** செய்த அனைத்து **App**பையும் **Delete** செய்யவும்.
- தவறான நண்பர்களின் நம்பரை பிளாக் செய்வது நல்லது.
- தேவையில்லாத **Group**ல் இருந்து வெளியே வர வேண்டும்.
- **WhatsApp, Instagram, Facebook, snapchat** என்று எந்த **App** எல்லாம் வீடியோஸ் பார்க்கப் பயன்படுத்தினீர்களோ அவற்றை நீங்களே **Uninstall** செய்ய வேண்டும்.
- முக்கியமாகத் தனிமையில் இருப்பதை தவிர்த்து விடுங்கள். அதுதான் நம்மை அநேக பாவங்களுக்குட்படுத்தும்.



## மேலும் சிலவற்றை முயற்சி செய்யலாம்:

- உங்கள் **IT** கம்பெனியில் உங்களை **Update** செய்து கொள்ள சில **Training** செல்லலாம்.



- எந்த **Training** சென்றால் உங்கள் **Domain**ல் முன்னேற முடியும் என்று **Research** செய்து பார்த்து **HR Team**மில் கேட்டு உங்களுக்கு உபயோகமான **Training**ஐ நீங்களே **Recommend** செய்யுங்கள்.
- உங்கள் கவனத்தை வீடியோவிலிருந்து புத்தகம், படிப்பு, **Extra skill set Training, online training** என்று நீங்களே **Register** செய்து படியுங்கள்.
- இப்படி உங்களை **Busy**யாக **engaging** ஆக வைத்துக் கொள்ளும்போது, ஒரு **self-confidence, encouragement** உங்களுக்கு உண்டாக வாய்ப்பு உண்டு.

இதைத் தாண்டிப் பரிசுத்தமாக வாழ்கின்றோம் என்ற மகிழ்ச்சியும் நம்பிக்கையும் உங்களைப் புதிய வேகத்தோடு செயல்பட உதவி செய்யும்.

எனவே இவைகளை தவறாமல் முயற்சி செய்து, பாவக் குழியில் மீண்டும் விழுந்து விடாமல், பரிசுத்த வாழ்க்கையில் வெற்றி நடைபோட வாழ்த்துக்கள்!

**யூதா 1:24 வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவருமாக இருக்கிற தேவனை நோக்கிக் கூப்பிட்டு ஜெயம் பெறுங்கள்!!**

# வேதாகம களஞ்சியம்

Hello Friends! சென்ற மாதத்தில் யோசுவா, நியாயாதிபதிகள், ரூத் புத்தகங்களைத் தியானித்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்த மாதம் இராஜாக்கள் & நாளாகமம் புத்தகங்களின் பின்னணியை அறிந்துகொள்ளுவோமா?

வேத ஆராய்ச்சி : ஜோயல்

இப்புத்தகங்கள், இஸ்ரவேலின் அரசாட்சியின் எழுச்சி, பிரிவு, வீழ்ச்சி மற்றும் சிறைப் பதிவு செய்கின்றன. அவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து, ஒரு அரசாட்சியின் கீழ் இஸ்ரவேலின் பயணத்திற்கு வரலாற்று விளக்கத்தையும் ஆவிக்குரிய விளக்கத்தையும் அளித்து, தேவனுக்குக் கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமை எவ்வாறு இஸ்ரவேலின் தலைவிதியை வடிவமைத்தது என்பதை வெளிப்படுத்துகின்றன.

## 1 & 2 இராஜாக்கள்

தாவீதின் ஆட்சிகால முடிவிலிருந்து தொடர்கின்றது. சாலொமோனிலிருந்து தொடங்கி, அந்த இராஜ்ஜியம் - ஞானம், செல்வம் மற்றும் ஆலய வழிபாடு ஆகியவற்றில் அதன் உச்சத்தை அடைகிறது. ஆனால், சாலொமோனின் மரணத்திற்குப் பிறகு, தேசம் இஸ்ரவேல் (Northern Kingdom) மற்றும் யூதா (Southern Kingdom) என இரண்டு இராஜ்ஜியங்களாகப் பிரிக்கப்படுகிறது. அடுத்தடுத்து வந்த ராஜாக்களில் பெரும்பாலானோர் ஜனங்களை விக்கிரக வழிபாட்டிற்கும், ஒழுக்கச் சீரழிவிற்கும் நேராக வழிநடத்தினார்கள். இக்காலகட்டத்தில் எலியா, எலிசா போன்ற தீர்க்கதரிசிகள் எழும்பி ஜனங்களை மீண்டும் தேவனிடம் வழிநடத்தினார்கள். இறுதியில், தொடர்ச்சியான பாவத்தின் காரணமாக, இஸ்ரவேல் அசீரியாவிடம் வீழ்ந்தது. பின்னர், யூதா பாபிலோனால் சிறைபிடிக்கப்பட்டது.

### இப்புத்தகங்களின் மையச் செய்தி:

கீழ்ப்படிதலை மீறுவது நியாயத்தீர்ப்புக்கு வழிவகுக்கும்.

இதற்கு மாறாக, 1 & 2 நாளாகமங்கள் - சிறையிருப்புக்கு பின் எழுதப்பட்ட இந்தப் புத்தகங்கள் அதே வரலாற்றின் பெரும்பகுதியை வேறுபட்ட முக்கியத்துவத்துடன் மீண்டும் கூறுகின்றன. முதன்மையாக யூதா, தேவாலயம் மற்றும் தாவீதின் வம்சத்தின் மீது கவனம் செலுத்துகின்றன. நாளாகம



முக்கிய நபர்கள்:
தாவீது, சாலொமோன், ரெகொபெயாம், யெரொபெயாம், ஆசா, யோசபாத், எசேக்கியா, யோசியா.

**ஆசிரியர்:** தாவீது, சாலொமோன், எசேக்கியா மற்றும் யோசியா போன்ற தேவனை கனப்படுத்திய ராஜாக்களை முன்னிலைப்படுத்துகிறார், அதே நேரத்தில் ராஜாக்கள் புத்தகத்தில் வலியுறுத்தப்பட்ட தோல்விகளைப் பெரும்பாலும் தவிர்க்கிறார் அல்லது குறைத்துக் காட்டுகிறார். ஆராதனை, ஆலய சீரமைப்பு மற்றும் உடன்படிக்கைக்கு உண்மையாய் இருத்தல் ஆகியவை மையக் கருப்பொருள்களாகும்.


### 1. சாலொமோன் ஆலயத்தைக் கட்டுகிறார்



(1 இராஜாக்கள் 5–8,
2 நாளாகமம் 2–7)

### 2. இராஜ்ஜியம் பிளவுபடுகிறது

(1 இராஜாக்கள் 12, 2 நாளாகமம் 10)



இஸ்ரவேல் (வடக்கு) – 10 கோத்திரங்கள்,
யூதா (தெற்கு) – 2 கோத்திரங்கள்

### 3. யெரொபெயாமின் விக்கிரக ஆராதனை

(1 இராஜாக்கள் 12–13)



### 4. எலியாவின் அற்புதங்கள் (1 இராஜாக்கள் 17 – 2 இராஜாக்கள் 2)



- மழை நிறுத்தப்பட்டது (1 இராஜாக்கள் 17:1)
- முடிவில்லாத மாவும் எண்ணெயும் (1 இராஜாக்கள் 17:8–16)
- மீண்டும் மழை – (1 இராஜாக்கள் 18:41–45)
- விதவையின் மகனை உயிர்ப்பித்தார் (1 இராஜாக்கள் 17:17–24)
- கர்மேல் மலையில் வானத்திலிருந்து வந்த அக்கினி (1 இராஜாக்கள் 18:30–38)
- ஆகாபின் இரதத்தை முந்தி ஓடினார் (1 இராஜாக்கள் 18:46)
- வீரர்களை அக்கினி பட்சித்தது (2 இராஜாக்கள் 1:9–12)
- யோர்தானை இரண்டாய் பிளந்தார் (2 இராஜாக்கள் 2:7–8)
- சுழல் காற்றில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் (2 இராஜாக்கள் 2:11)



### 5. எலிசாவின் அற்புதங்கள் (2 இராஜாக்கள் 2 – 13)

- யோர்தான் நதியைப் பிரித்தார் (2 இராஜாக்கள் 2:13-14)
- கெட்டுப்போன தண்ணீரைக் ஆரோக்கியமாக்கினார் (2 இராஜாக்கள் 2:19-22)
- விதவையின் எண்ணெய் பெருகியது (2 இராஜாக்கள் 4:1-7)
- குறைந்த உணவைக் கொண்டு 100 பேருக்கு உணவளித்தார் (2 இராஜாக்கள் 4:42-44)
- சூனேமியப் பெண்ணின் மகனை உயிர்ப்பித்தார் (2 இராஜாக்கள் 4:32-37)
- எலிசாவின் எலும்புகளால் மரித்த மனிதன் உயிர்ப்பிக்கப்பட்டான் (2 இராஜாக்கள் 13:20-21)
- விஷமுள்ள குழம்பு பாதுகாப்பானதாக மாற்றப்பட்டது (2 இராஜாக்கள் 4:38-41)
- நாகமான் குஷ்டரோகத்திலிருந்து குணமடைந்தார் (2 இராஜாக்கள் 5:1-14)கேயாசி குஷ்டரோகத்தால் தாக்கப்பட்டார் (2 இராஜாக்கள் 5:20-27)
- தெய்வீகத் தலையீட்டால் மோவாப் தோற்கடிக்கப்பட்டது (2 இராஜாக்கள் 3:16-25)
- கோடரியின் தலை மிதக்கிறது (2 இராஜாக்கள் 6:1-7)
- எதிரியின் திட்டங்களை வெளிப்படுத்துகிறது (2 இராஜாக்கள் 6:8-12)
- பரலோக சேனைக்கு ஊழியனின் கண்கள் திறக்கப்பட்டன (2 இராஜாக்கள் 6:17)
- எதிரி சேனையைக் குருடாக்கி மீண்டும் நிலைநிறுத்துகிறது (2 இராஜாக்கள் 6:18-23)


### 6. இஸ்ரவேலின் வீழ்ச்சி

(2 இராஜாக்கள் 17)



### 7. எசேக்கியாவின் ஜெபமும் விடுதலையும்

(2 இராஜாக்கள் 18–19,
2 நாளாகமம் 29–32)



### 8. யோசியாவின் எழுப்புதல்

(2 இராஜாக்கள் 22–23,
2 நாளாகமம் 34–35)



### 9. யூதாவின் வீழ்ச்சி மற்றும் நாடுகடத்தல்

(2 இராஜாக்கள் 24–25,
2 நாளாகமம் 36)





# ஜெபிக்கலாம் வாங்க!! – ஜூன் 2026


ஜெபம் : ஞானி

## குழந்தைகள் & கல்வி




- வறுமையால் கல்வியை இழந்து நிற்கும் குழந்தைகளுக்குப் படிக்கும் வாய்ப்புகள் திறக்கப்படவும், பள்ளிக்குச் செல்ல முடியாமல் இருக்கும் கோடிக்கணக்கான குழந்தைகளின் எதிர்காலத்தைக் கர்த்தர் பாதுகாக்கவும், ஆசிரியர்கள் போதுமான அளவில் நியமிக்கப்படவும், கல்வி அமைப்பு மேம்படவும் ஜெபிப்போம்.
- கல்விக்குத் தேவையான நிதி, புத்தகங்கள், உபகரணங்கள் அனைத்தும் போதுமான அளவில் கிடைக்கவும், அனைத்து நாடுகளும் குழந்தைகளுக்கு இலவசமும் தரமானதுமான கல்வியை வழங்கவும், குடும்பங்களின் வருமானம் உயர்ந்து குழந்தைகள் படிப்பதற்கான உதவிகள் கிடைக்கவும் ஜெபிப்போம்.
- நம் நாட்டில் லட்சக்கணக்கான மாணவர்கள் மருத்துவம், பொறியியல் போன்ற உயர்கல்வி படிப்புகளில் சேர கடினமாக உழைத்தும், தகுதி இருந்தும் வாய்ப்பு இழக்கும் நிலை மாறவும், முறைகேடுகள் மற்றும் குறுக்கு வழி சேர்க்கைகள் தடுக்கப்படவும், தகுதியுள்ள மாணவர்கள் அனைவருக்கும் நியாயமான கல்வி வாய்ப்பு கிடைக்கவும் ஜெபிப்போம்.

## அரசு மருத்துவமனைகள்



அரசு மருத்துவமனைகளில் நல்ல சுகாதார சூழல், நவீன மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்படவும், திறமையான மருத்துவர்கள் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றவும், குழந்தை கடத்தல், வன்முறை, திருட்டு போன்ற அநீதிகள் முற்றிலும் நிறுத்தப்படவும், ஊழியர்கள் நேர்மையுடனும் பொறுப்புடனும் செயல்படவும் ஜெபிப்போம்.

## குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகள்



- குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் முற்றிலும் ஒழிக்கப்படவும், பாவ ஆசைகளைத் தூண்டும் பொல்லாத செயல்கள் அழிக்கப்படவும், குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிப்போர் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.
- குழந்தைகளைக் கடத்தி விற்பனை செய்வது, விபசாரத்திற்குள் தள்ளுவது போன்ற அநீதிகள் முற்றிலும்



நிறுத்தப்படவும், பாதிக்கப்பட்ட குழந்தைகள் மீட்கப்பட்டு பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

▶ பள்ளிகளில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்கள் முற்றிலும் நிறுத்தப்படவும், மாணவர்கள், ஆசிரியர்கள், வாகன ஓட்டுநர்கள் தொடர்பான தவறுகள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவும், அனைத்து குழந்தைகளும் பாதுகாக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

## ஆரோக்கியம் & சுற்றுச்சூழல்



▶ காற்று மாசுபாட்டால் கருவில் வளரும் சிசுக்கள் முதல் முதியவர்கள்வரை பாதிக்கப்படும் நிலை மாறவும், சுவாச நோய்களால் ஏற்படும் மரணங்கள் குறையவும், பச்சிளம் குழந்தைகள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

▶ உலகில் அதிக காற்று மாசுபாடு உள்ள நாடுகளில் ஒன்றாக இருக்கும் நம் இந்திய தேசத்தில், டெல்லி, பீகார், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகரித்து வரும் மாசுபாடு கட்டுப்படுத்தப்படவும், மக்களின் உடல்நலம் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.



▶ தொடர்ந்து ஏற்பட்டு வரும் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உலக நாடுகள் ஒன்றுபட்டு செயல்படவும், புவி வெப்பமயமாதலை தடுக்க சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவும், ஜனங்கள் இயற்கைப் பேரழிவிலிருந்து காக்கப்படவும் ஜெபிப்போம்.

## சிறார்கள் & சமூக நிலை



▶ சிறார்கள் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் நல்ல பாதையில் நடக்கவும், தீய பழக்கங்கள், வன்முறை சிந்தனைகள், தவறான நட்புகள் அகலவும், பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஒழுக்கம், நற்குணம் வளர்க்கும் இடங்களாக மாறவும் ஜெபிப்போம்.



▶ சமூக வலைத்தளங்கள், திரைப்படங்கள் மற்றும் தவறான கலாச்சார தாக்கங்களால் இளைஞர்கள் சீரழிவதிலிருந்து காக்கப்படவும், குடும்ப மதிப்புகள் நிலைநிறுத்தப்படவும், தேசத்தில் பரிசுத்தமும் நீதியும் நிலவவும் ஜெபிப்போம்.




வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய
வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும்,
வேதத்தின் ஆழமான இரகசியங்களை
அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி
ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும்
IGNITERS கூடுகை அமைகிறது.
நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று
பெலன் அடையலாமே! உன்னை
பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும்
பெலப்படுத்த

**ஆயத்தப்படு!**
**ஆயத்தப்படுத்து!**

## EVERY 1st SUNDAY (7th JUNE)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SUNDAY (14th JUNE)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND (5PM - 7:30PM)**
Shekinah NLA Church, Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto, 1st floor,
163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3rd SATURDAY (20th JUNE)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3rd SUNDAY (21st JUNE)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**TIRUPORUR (3 PM - 6 PM )**
Come compassion Centre,
Mettuthandalam, Tiruporur.
9710809626

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4th SUNDAY (28th JUNE)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

# வாலிபர் ஊழியத்திற்கு காணிக்கை

## அல்லது

# சந்தா செலுத்த விரும்பினால்...

* வாலிபர் உலகம் பத்திரிக்கை புதிதாகப் பெற்றுக்கொள்ள.

* சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ள.


(தமிழ், ஆங்கிலம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகிறது).

மேல் கொடுக்கப்பட்டுள்ள வங்கி கணக்கு அல்லது QR குறியீட்டைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

Scan Me

**Bank detail**

| | |
|---|---|
| A/C name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/C no | : 054100710400515 |
| Bank | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| Branch code | : 000054 |
| IFS Code | : TMBL0000054 |
| MICR code | : 627060021 |
| SWIFET code | : TMBLINBBTUT |




வாலிபர் உலகம் பத்திரிக்கைக்கான சந்தா தொகை அல்லது காணிக்கை செலுத்திய பின், 9750955547 என்ற எண்ணிற்கு உங்கள் விவரங்களைத் தகவலாக அனுப்பி உறுதிப்படுத்தவும்.

| | | |
|---|---|---|
| சந்தா விவரங்கள்: | 1 ஆண்டுக்கு ரூ. 100/- | 13 ஆண்டுகளுக்கு ரூ. 1000/- |

"வாலிபர் உலகம்" மாதாந்திர பத்திரிக்கை தமிழ், ஆங்கிலம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகிறது. உங்களுக்கு தேவையான மொழியைத் தெளிவாகக் குறிப்பிட்டு தெரிவிக்கவும்.

# Career Guidance

## UPSC (IAS / IPS) தேர்வுக்குத் தயாராகும் முறைகள்

இந்தியாவின் மிக உயர்ந்த போட்டித் தேர்வுகளில் ஒன்றான UPSC தேர்வில் வெற்றி பெற சரியான திட்டமிடல், தொடர் முயற்சி மற்றும் தெளிவான தயாரிப்பு மிகவும் அவசியம்.

### பாடத்திட்டத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளுங்கள்

UPSC அறிவிப்பைக் கவனமாக வாசித்து, Prelims மற்றும் Mains தேர்வுகளின் முழு பாடத்திட்டத்தையும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். என்ன படிக்க வேண்டும் என்பது தெரிந்தால், தயாரிப்பு எளிதாகும்.

### அடிப்படை புத்தகங்கள் (NCERT) படிக்கவும்

6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரை உள்ள NCERT சமூக அறிவியல் புத்தகங்கள் (வரலாறு, புவியியல், அரசியல், அறிவியல், பொருளாதாரம்) அடிப்படை அறிவை வலுப்படுத்த மிகவும் உதவும்.

### தினசரி செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம்

'The Hindu' அல்லது 'Indian Express' போன்ற தரமான ஆங்கில நாளிதழ்களைத் தினமும் வாசித்து: நடப்பு நிகழ்வுகள், அரசுத் திட்டங்கள், சர்வதேச செய்திகள், பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றை குறிப்பெடுக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

### விருப்பப் பாடத்தை சரியாகத் தேர்வு செய்யுங்கள்

Mains தேர்வுக்கு ஒரு Optional Subject தேர்வு செய்ய வேண்டும். உங்கள் ஆர்வம், படித்த துறை, மற்றும் மதிப்பெண் பெறும் வாய்ப்பு ஆகியவற்றைப் பார்த்துப் புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்யுங்கள்.

### தொடர்ந்து பயிற்சி மேற்கொள்ளுங்கள்

முந்தைய ஆண்டுகளின் வினாத்தாள்களை (Previous Year Question Papers) தீர்த்துப் பார்க்கவும். Mock Tests எழுதுவதன் மூலம், நேர மேலாண்மை, கேள்வி புரிதல் திறன், துல்லியமான பதில் எழுதும் திறன் இவற்றை மேம்படுத்த முடியும்.

### விடை எழுதும் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

Mains தேர்வில் வெற்றி பெற Answer Writing Practice மிகவும் முக்கியம். தினசரி ஒரு கேள்விக்கு structured answer எழுதுங்கள், குறைந்த வார்த்தைகளில் தெளிவாக எழுதப் பழகுங்கள், Introduction – Body – Conclusion முறையைப் பின்பற்றுங்கள்.

### நேர்மறை மனப்பான்மை மற்றும் தொடர்ச்சி

**UPSC** என்பது ஒரு **marathon** போன்ற தேர்வு. அதற்கு விடாமுயற்சி, தன்னொழுக்கம், பொறுமை, தொடர்ச்சியான படிப்பு மிகவும் அவசியம்.

**கல்வித் தகுதி:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு இளங்கலை பட்டம் (Any Bachelor Degree).

**வயது வரம்பு:**
- பொதுப்பிரிவு: 21 – 32 வயது
- OBC / SC / ST மற்றும் பிற பிரிவினருக்கு அரசு விதிகளின்படி வயது தளர்வு உண்டு.

ஒரு சிறந்த தினசரி படிப்புத் திட்டம் (Daily Study Routine)

**காலை (5.30 – 8.00):**
செய்தித்தாள் வாசிப்பு
Current Affairs குறிப்பெடுத்தல்
முக்கிய ஆசிரியர் கட்டுரைகள் (Editorials) வாசித்தல்

**பகல் (10.00 – 1.00):**
Core Subjects (Polity / History / Geography / Economy)
NCERT அல்லது Standard books படித்தல்

**மாலை (3.00 – 6.00):**
Optional Subject preparation
Previous year questions practice

**இரவு (7.30 – 10.00):**
அன்று படித்தவற்றை Revision
Answer writing practice
Short notes தயாரித்தல்

# செய்திகள்!

## தமிழ்நாட்டில் தினசரி மின்சார பயன்பாடு 20 ஆயிரம் மெகாவாட் ஆக உயர்வு!

### தடையின்றி மின்சாரம் வழங்க ஏற்பாடு!




பொதுமக்களின் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அடுத்த 3 மாதங்களுக்குத் தினசரி 22,000 மெகாவாட் மின்சாரம் விநியோகிப்பதில எந்தப் பிரச்சனையும் இருக்காது.

தமிழ்நாட்டில் தினசரி மின்சார தேவை சுமார் 16 ஆயிரம் மெகாவாட் ஆகும். கோடை காலங்களில் மின் விசிறி, ஏ.சி., பிரிட்ஜ் போன்ற மின் சாதனங்களின் பயன்பாடு அதிகமாக இருக்கும். அந்த வகையில் இப்போது 20 ஆயிரம் மெகாவாட் வரை மின்சார பயன்பாடு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு மே 2ம் தேதி அதிகபட்சமாக 20,830 மெகாவாட் மின்சாரம் பயன்பாட்டில் இருந்தது. இப்போது கோடை காலம் துவங்கிவிட்டதால் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

வரும் நாட்களில் தினசரி மின்சார பயன்பாடு 22 ஆயிரம் மெகாவாட் வரை உயரும் எனத் தெரிகிறது. தற்போது தமிழக மின்வாரியத்தின் கீழ் இயங்கும் அனல் மின்நிலையங்கள் மூலம் தினசரி 4,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் மத்திய அரசின் தொகுப்பிலிருந்து தினசரி 6,000 மெகாவாட், சூரிய மின்சக்தி மூலம் 6,000 மெகாவாட், நீண்டகால கொள்முதல் திட்டத்தின் கீழ் 2,000 மெகாவாட், நடுத்தரகால கொள்முதல் மூலம் 2,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. மீதமுள்ள2,000 மெகாவாட் மின்சாரம் குறுகியகாலமின் கொள்முதல் மற்றும் மின்சார பரிமாற்ற திட்டங்களின் கீழ் அடுத்த 3 மாதங்களுக்குத் தனியார் நிறுவனங்கள் மற்றும் பிற மாநிலங்களிடமிருந்து பெறப்படுகிறது. இதற்கிடையில், நீர், எரிவாயு மற்றும் காற்றாலைமூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் உச்சநேரங்களில் (மாலை 6 மணி முதல் அதிகாலை 5 மணிவரை) பயன்படுத்தப்படுகிறது. எனவே, பொதுமக்களின் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அடுத்த 3 மாதங்களுக்குத் தினசரி 22,000 மெகாவாட் மின்சாரம் விநியோகிப்பதில் எந்தப் பிரச்சனையும் இருக்காது. தடை இல்லாமல் மின்விநியோகம் செய்யத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்....

Owned & Published by Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakshmipuram, Nalumavadi - 628 211


வாலிபர் எழுப்புதல் கூடுகை! 2026
சேலம் மாவட்டம்
ஆத்தூரில்...
நாள்: ஜூன் 13 சனிக்கிழமை
நேரம்:
மாலை 5:00 முதல் 8:00 வரை
இடம்: அண்ணா கலையரங்கம்,
புதிய பஸ் நிலையம் அருகில், ஆத்தூர், தாலுகா.
செய்தியும், ஜெபமும்:
சகோ. சாம் ஜெபராஜ்
தொடர்புக்கு:-
98948 20385 | 99620 85523 | 95977 54872
செங்கல்பட்டு மாவட்டம்
திருக்கழுங்குன்றத்தில்...
ஜூன் 28 ஞாயிறு
நேரம்: மாலை 3 முதல் 6 வரை
இடம்: பிளஸ்ஸிங்ஸ் மேல்நிலைபள்ளி,
கீரப்பாக்கம், (ஆசான் கல்லூரி அருகில்)
செய்தியும், ஜெபமும்:
சகோ. காலேப்
தொடர்புக்கு:
97108 09626 | 95975 88831


பேசலாம் வாங்க
• Mohan Uncle
உடன் பேசலாம் வாங்க!!
• உங்கள் சந்தேகங்களை நேரடியாக
Mohan Uncle உடன் பேச
கீழ கொடுக்கப்பட்டுள்ள
QR CODE Scan செய்து
பதிவு செய்து கொள்ளுங்கள்.

Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

# REVIVAL IGNITERS CAMP

டெல்லி மாநிலத்தில் உள்ள வாலிபர்கள் அக்கினியை பரவச் செய்கிறவர்களாக மாற வேண்டும் என்பதற்காகத் தேவ திட்டத்தின்படி மே 13,14,15 ஆகிய தேதிகளில் Don Bosco Resource Centreல் வைத்து வாலிபர் எழுப்புதல் முகாம் நடத்த தேவன் உதவி செய்தார். சுமார் 150க்கும் மேலான வாலிபர்கள் கலந்து கொண்டு எழுப்புதல் அக்கினியைப் பெற்று கடந்து சென்றனர். Dr. அன்புராஜன், சகோ. சாம் ஜெபராஜ் மற்றும் சகோ. அவினாஷ் ஆகியோரை தேவன் வல்லமையாய் பயன்படுத்தினார். வந்திருந்த அனைவரையும் தேவன் வரங்களினாலும் வல்லமையினால் நிரப்பினார்.

## தேவனுக்கே மகிமை...!







